செய்தி வெளியீடு எண்.833 நாள்.3.10.2008

# நான்கு காவல்துறை அதிகாரிகளுக்கு காந்தியடிகள் காவல் பதக்கங்கள்

## முதல்வர் ஆணை

( 1 ) கடலூர் மாவட்டம், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வரும் திரு. செ.பெ. முருகேசன், ( 2 ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு உட்கோட்டம், துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு. தே. மகேந்திரவர்மன், ( 3 ) விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் நகர உதவி காவல் ஆய்வாளர் திரு. பா. குமார் மற்றும் ( 4 ) காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் உதவி காவல் ஆய்வாளர் திரு. இரா. ரவி என்பவர்களுக்கு கள்ளச்சாராய ஒழிப்பு பணியில் பாராட்டத்தக்க பணியாற்றியமைக்காக, 2008 ஆம் ஆண்டுக்கான காந்தியடிகள் காவலர் விருது வழங்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. மேற்சொன்ன விருது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2009 குடியரசு தினத்தன்று வழங்கப்படும் இவ்விருதுடன் பரிசுதொகையாக தலா ரூ.20,000/- மும் அளிக்கப்படும்.

எஸ். மாலதி
அரசு முதன்மைச் செயலாளர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.